## August 27, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதிக் கப்பட்டுள்ள நிலையில், இன்று முதல் கூடுதலாக 25 சதவீத வரி அமலாவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
   i. இதன் காரணமாக, அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருள்கள் மீது இனி 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது.
   ii. இது, இறால், ஆயத்த ஆடைகள், தோல், ரத்தினங்கள் மற்றும் நகைகள் உள்ளிட்ட தொழிலாளர் சார்ந்த இந்ததிய நிறுவனங்கள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் எழுந்துள்ளது.
   iii. கூடுதல் வரியிலிருந்து மருந்து, எலக்ட்ரானிக்பொருள்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
   iv. 'ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த இந்தியா முன்வரவில்லை என்று குற்றஞ்சாட்டி, இந்திய பொருள்களுக்கு கூடுதலாக 25 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார்.
2. நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டத்தை சென்னை மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். காலை உணவுத் திட்டத்துக்காக செலவிடும் தொகை, எதிர்கால சமூகத்தை கட்டமைப்பதற்கான முதலீடு என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.
   i. இதன் மூலம் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 37,416 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கின்ற 20 லட்சத்து 59 ஆயி ரம் மாணவர்கள் தினமும் காலை யில் சூடான, சுவையான, சத்தான உணவு சாப்பிட்டு, தெம்பாக வகுப் பறைகளுக்குச் செல்வர்.
   ii. இந்த விழாவில் சிறப்பு விருந்தனராக புஞ்சாப்பின் முதல்வர் பகவந்த் மான் பங்கேற்றினார்.
3. லிதுவேனியாவின் புதிய பிரதமராக, தொழிலாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் இங்கா ருகினியேனை (44) நாடாளுமன்றம் தேர்ந்தெடுத்தது. முறைகேடு குற்றச்சாட்டு காரணமாக இதுவரை பிரதமராக இருந்த கின்டாடஸ் பாலுகஸ் பதவி விலகியதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் அவரை அந்தப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்துள்ளது.
4. கனடாவில் ஆர்க்டிக் பிராந்தியத்தில் காட்டுத் தீ மிகத்தீவிரமாகப் பரவிவரும் சூழலில், இந்தப் பேரிடரை எதிர் கொள்வதற்காக 200 கோடி டாலர் (சுமார் ரூ.17,530 கோடி) ஒதுக்கீடு செய்யவிருப்பதாக அந்த நாட்டு பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.
5. பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா பகுதியில் மேலும் 2 சிறுவர்களுக்கு போலியோ தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்துடன் நடப்பு 2025-ஆம் ஆண்டில் மட்டும் அந்தநாட்டில் போலியோ பாதிப்பு கண்டறியப்பட்ட

சிறுவர்களின் எண்ணிக்கை 23-ஆக உயர்ந்துள்ளது. உலகிலேயே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் மட்டும்தான் போலியோ இன்னமும் பரவிவருகிறது.

6. அணுசக்தி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கவும், ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்புடன் (ஐஏஇஏ) மீண்டும் ஒத்துழைக்கவும் ஈரானுக்கு ஐரோப்பிய நாடுகள் விதித்துள்ள கெடு முடிய இன்னும் சில நாள்களே உள்ள நிலையில், இது தொடர்பாக அந்த நாட்டுடன் அவை கடைசிநேர பேச்சுவார்த்தையை தொடங்கின.
   i. தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதங்கள் தயாரிப்ப தற்கானவை இல்லை என்பதை உறுதி செய்வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமெரிக்காவுடன் ஈரான் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும்; மேலும், ஐஏஇஏ-வுக்கு அளித்து வந்த ஒத்துழைப்பை அந்த நாடு மீண்டும் தொடர வேண்டும்;
   ii. ஆக. 31-க்குள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், 2015 அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் விதிப்பதற்கான நடைமுறைகள் தொடங்கப்படும் என்று பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி (இ3) ஆகிய நாடுகள் எச்சரித்துள்ளன.

7. அமெரிக்க கடற்படை கப்பலான ஃபிராங்க் கேபிள் சென்னை துறைமுகத்துக்கு வந்தடைந்தது. இந்தோ-பசிபிக் பகுதியில் உள்ள நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர் ஆயுதம் தாங்கிய கப்பல்களுக்கு பராமரிப்பு, தளவாடங்கள் உள்ளிட்டவை வழங்கும் திறன் கொண்ட அமெரிக்க கடற்படை கப்பலான ஃபிராங்க் கேபிள் (ஏஎஸ்-40) அமெரிக்காவில் உள்ள குவாமி கடற்படைத் தளத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
   i. இந்நிலையில், நல்லெண்ணப் பயணமாக சென்னை துறை முகத்துக்கு ஃபிராங்க் கேபிள் கப்பல் வந்தடைந்தது. இந்தக் கப்பலை இந்திய கடற்படை உயர் அதிகாரிகள், அமெரிக்க தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.
   ii. 1979-ஆம் ஆண்டு அமெரிக்கக் கடற்படையில் முதல் முறையாக இணைக்கப்பட்ட ஃபிராங்க் கேபிள் கடற்படையில் சேவையாற்றி வரும் மற்ற கப்பல்களை பழுதுபார்க்கவும், மறுசீரமைக்கவும் உதவிகரமாகச் செயல்பட்டுவந்தது. இதில் சுமார் 350 முதல் 400 கடற்படை வீரர்கள் மற்றும் மற்றும் 150 சிப்பந்திகள் என சுமார் 550 பேர் கொண்ட குழுவினர் இந்தக் கப்பலில் பணியாற்றி வருகின்றனர்.

8. தங்கள் நாட்டில் யூதர்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் ஈரானின் வழிகாட்டுதலின்பேரில்தான் நடந்ததாகக் குற்றஞ்சாட்டிய ஆஸ்திரேலிய அரசு, அதற்குப் பதிலடியாக ஈரானுடனான தூதரக உறவைத் துண்டிப்பதாக அறிவித்துள்ளது.

9. கஜகஸ்தானில் நடைபெறும் ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில், தனிநபர் மற்றும் அணி என இரு பிரிவுகளில் இந்தியாவின் சிஃப்ட் கௌர் சம்ரா தங்கப் பதக்கம் வென்றார்.

i. 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசி ஷன்ஸ் பிரிவில் களமாடிய அவர், தனிநபர் இறுதிச்சுற்றில் 459 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கத்தை தட்டிச் சென்றார்.

10. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-

i. ஆஸ்திரேலிய பிரதமர் - அந்தோணி அல்பானீஸ்
ii. வெனிசுலாவின் ஜனாதிபதி - நிக்கோலஸ் மதுரோ
iii. பி.வி.சிந்து - இந்திய பூப்பந்து வீரர்
iv. எச்.எஸ். பிரனாய் - இந்திய பூப்பந்து வீரர்